Kungumam Thozhi

குங்குமம் தோழி
உள்ளம் கவர்ந்தவள்

1-15/06/2014
Page # 48

# 100 கேள்விகள்
## 100 நிபுணர்கள்

தொகுப்பு: ஆர்.வைதேகி



### வேலைவாய்ப்பு - சிற்பக்கலை

**50** சிற்பக்கலையில் பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் எந்தளவுக்கு உள்ளன? அதை அவர்கள் முழுநேரத் தொழிலாக நம்பி இறங்க முடியுமா?



**'விவேக் வேதிக் ஆர்கிடெக்ச்சர்' ஸ்தபதி தட்சிணாமூர்த்தி**

சிற்பி என்கிற வார்த்தை ஆண், பெண் இருவரையும் குறிப்பது. சமீபகாலங்களில் சிற்பக் கலையில் பெண்களும் ஈடுபடுவதைப் பற்றி அதிகம் கேள்விப்படுகிறோம். சிற்பக் கலை என்பது உடல் வலிமை தேவைப்படுகிற ஒன்று. சிற்பம் செதுக்குவதில் முதல் பகுதியான கல்லை அடிப்பதற்கு வலிமையான உடல்வாகு அவசியம். அது பெரும்பாலான பெண்களுக்கு சாத்தியப்படுவதில்லை. இரண்டாவது கட்டமான சிலை வடிப்பில் சிற்பி, அந்தச் சிலையுடன் ஐக்கியமாகி சிலையாகவே மாறும் மனநிலைக்கு தயாராக வேண்டும். இந்த இரண்டு தகுதிகளும் உள்ள யாரும் சிற்பக்கலையில் ஈடுபடலாம். சிற்பங்கள் என்று வரும்போது அவை கோயில்கள் போன்ற புனிதமான இடங்களுக்கு செல்பவையா அல்லது வெறும் அழகுக்காக உருவாகுபவையா என்பதையும் பார்க்க வேண்டும். மாதவிலக்கு நாட்களிலும் கர்ப்பக் காலத்திலும் பெண்கள் ஆன்மிகத்துக்காக சிலைகள் வடிப்பதை தவிர்க்க நினைக்கலாம். உடல்ரீதியாக அந்த நாட்களில் அவர்கள் பலவீனமாக உணர்வது ஒரு காரணம். மற்றபடி ஆர்வமும் திறமையும் உடல் வலிமையும் உள்ள யாரும் சிற்பக்கலையில் ஈடுபடலாம். அவர்களுக்கு இத்துறையில் வாய்ப்புகளுக்கும் பஞ்சமில்லை.